செ.வெ. எண்: 298 நாள்: 1.07.17

பத்திரிக்கை செய்தி

தமிழக அரசு வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வழிவகை செய்யும் வகையில் 2017-18ம் ஆண்டில் நாட்டுக்கோழி / கறிக்கோழி வளர்ப்பு திட்டம் காஞ்சிபுரம் மண்டலத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு அதற்கான நாட்டுக்கோழி பண்ணை (250 கோழிக்குஞ்சுகள் கொண்டது) 160 அலகுகளுக்கு ரூ.73,20,000/- (ரூபாய் எழுபத்தி மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) / கறிக்கோழி பண்ணை (5000 கோழிக்குஞ்சுகள் கொண்டது) 15 அலகுகளுக்கு ரூ.40,31,250/- (ரூபாய் நாற்பது இலட்சத்து முப்பத்தோறாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி நாட்டுக்கோழி / கறிக்கோழி வளர்க்க ஆர்வமுள்ள பயனாளிகள் தங்களுக்கு அருகாமையிலுள்ள கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர் வாயிலாக் கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தாரர்கள் தங்கள் சொந்த செலவில் / வங்கி கடன் பெற்றோ பண்ணை அமைக்கலாம். குடும்ப அட்டை நகலுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி, பகுதியிலுள்ள வங்கி மேலாளரிடம் கடன் வழங்குவதற்கான அனுமதி இசைவுக் கடிதம் முதலானவற்றை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். கறிக்கோழிப்பண்ணை விண்ணப்பதாரர்கள் முத்தரப்பு ஒப்பந்தம் (Bankers, Integrators, Beneficiary) பெற்றும் அல்லது சொந்த செலவிலும் அமைக்கலாம்.

மேலும், இத்திட்டத்தில் (SC/ST) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழக அரசு ஓர் அலகு கொண்ட (250 பறவைகள் நாட்டுக்கோழி / 5000 பறவைகள் கறிக்கோழி கொண்ட) பண்ணைக்கு தமிழக அரசால் (25%) மானியம் வழங்கப்படுகிறது. மேலும், வங்கி கடன் பெற்று பண்ணை அமைக்கும் பயனாளிகளுக்கு நபார்டு வங்கியின் மூலம் மான்யமாக 25% (Back Ended Subsidy) சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த அறிவிப்பினை நாட்டுக்கோழி / கறிக்கோழி வளர்க்க ஆர்வமுள்ளவர்கள் பயன்படுத்தி தங்களின் பொருளாதாரத்தை உயர்த்தி பயனடையுமாறு காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
காஞ்சிபுரம்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.